**கவனிக்க** .- *2014.07.25ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


**අංක 1874 - 2014 අගෝස්තු මස 01 වැනි සිකුරාදා - 2014.08.01**

*1874 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 934 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 942 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | 943 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 943 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஓகத்து மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## தொடங்கொடை பிரதேச சபை

பதவிகள் வெற்றிடம்

தொடங்கொடை பிரதேச சபையில் வெற்றிடங்களாகவுள்ள மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையில் கீழே காட்டப்பட்டுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு ஆகக்குறைந்த தகைமைகளுள்ள மேல் மாகாணத்திற்குள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (தொடங்கொடை பிரதேச சபை நிர்வாக எல்லைகளுக்குள் அண்மைய மூன்று வருடங்களாக நிரந்தர வதிவாளராகவுள்ள விண்ணப்பதாரர்களுக்கும் ஏலவே நிரந்தர, தற்காலிக, அமைய, பதிலீட்டு, ஒப்பந்த மற்றும் செயற்றிட்ட அடிப்படையில் சேவையாற்றுவோருக்கும் முன்னுரிமை கொடுக்கப்படும்.)

| தொடர் இலக்கம் | பதவி பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமை |
|---|---|---|---|---|
| 1 | சாரதிகள் II | 1 | பொ. நி. சு. 06/2006 IV இற்கு அமைய பீஎல் - 3-2006 எ ரூ. 12,470-10×130-10×145-10×160– 10×170-ரூபா 18,860 IV ஆம் படிநிலைக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடை உண்டு. | க. பொ. த. (சா. தர) ப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச்சித்திகளுடன் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (ஒரே தடவையில் ஆகக் குறைந்தது 5 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.)<br>**தொழில்சார் தகைமைகள் :**<br>(அ) பிரத்தியேக வாகனம் மற்றும் நிகர நிறை 34 அந்தருக்கு குறைந்த பார மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாகன அனுமதிப்பத்திரம் வேண்டும். அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பாரமற்ற வாகனங்கள் செலுத்துவதில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவமிருத்தல் வேண்டும்.<br>(ஆ) திணைக்களத்தின் பிரதிநிதியொருவர், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வண்டி பரீட்சகரொருவர், பொலிஸ் போக்கு வரத்து பிரிவின் அலுவலர் ஆகியோரைக் கொண்ட சபையினால் நடாத்தப்படும் சாரதி நிபுணத்துவத்தை பரீட்சிக்கும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.<br>(iii) உயரம் ஆகக்குறைந்தது 5 அடி ஆக இருத்தல் வேண்டும்.<br>(iv) இரவு மற்றும் பகலில் சேவையாற்றும் பொருட்டு நல்ல தேகாரோக்கிய தகுதி இருப்பதுடன் நல்ல கண் பார்வை உடையவராக இருத்தலும் வேண்டும்.<br>(v) பெருவீதி சட்டக் கோவைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும். |
| 2 | அலுவலக உதவியாளர் | | ரூ. 13,060-10×130-10×145–12×160-ரூபா 17,600 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் |

**தேவையான ஏனைய தகைமைகள் :**

(1) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.) ;

(2) விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பங்கள் கோரப்படும் வேளையில் விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருட நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் ;

(4) தொடங்கொடை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வதியும் விண்ணப்பதாரிகளுக்கு முன் உரிமை வழங்கப்படும் ;

(5) விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(6) தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;

(7) அரச/உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபன சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(8) தற்போதும் தொடங்கொடை பிரதேச சபையில் அப்பதவிகளில் அமய, பதிலீட்டு, கொடுப்பனவுமீது ஒப்பந்த அல்லது கூலி அடிப்படையின்கீழ் சேவையாற்றுவோருக்கு முன் உரிமை வழங்கப்படும்.

**2. சேவையை நிபந்தனைகளும் நியதிகளும் :**

(1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;
(2) விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் ;
(3) இப்பதவிக்கு நியமனம் பெற்றோர் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராவர் ;
(4) இவ்வாட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கும் தாபன விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் அரச அல்லது மேல் மாகாண சபையினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் உட்பட்டதாக அமையும்.

**3. ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம் :**

(1) சட்டப்படியான நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ;
(2) விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும் :-
 (1) பிறப்புச் சான்றிதழ் ;
 (2) தேசிய அடையாள அட்டை ;
 (3) கல்விச் சான்றிதழ் ;
 (4) நிரந்தர வதிவை நிரூபிக்கும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
 (5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு (இதில் ஒன்று பிரதேசத்தின் கிராம அலுவலரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும். அது பிரதேச செயலாளரினால் கையொப்பம் இடப்படல் வேண்டும்) ;
 (6) தொழில்சார் அனுபவம் மற்றும் ஏனைய தகைமைகளுக்கான சான்றிதழ்கள் ;
 (7) ஏலவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவன தலைவரின் சிபாரிசு சான்றிதழுடன் அனுப்புதல் வேண்டும்.

ஆட்சேர்ப்பு சட்டவிதிகளுக்கமைய பெறுகின்ற அதியுயர் புள்ளிகளின் அடிப்படையில் தகுதியானோர் தெரிவுசெய்யப்படுவர்.

ஆரம்ப தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து 2014.08.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், தொடங்கொடை பிரதேச சபை, தொடங்கொடை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். தபாலில் காணாமல் போனதாக, திருத்தமாக முகவரி எழுதப்படாது திருப்பியனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்பேற்கமாட்டாதென்பதுடன் விண்ணப்ப திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்பினை தாமதித்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது ஆட்சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்த்திருக்கும் பதவி எண்ணிக்கைகளை திருத்துதல்/தீர்மானித்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல உரிமை தொடங்கொடை பிரதேச சபை செயலாளருக்கே உரித்தானதாகும்.

எச். ஏ. கஜன்த,
செயலாளர்,
தொடங்கொடை பிரதேச சபை.

பிரதேச சபை,
தொடங்கொடை,
2014, யுலை 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொடங்கொடை பிரதேச சபை**

..................................... பதவி

1. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
 முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் :-----.
2. தபால் விலாசம் :-----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. பிறந்த திகதி :
 ஆண்டு :-----. மாதம் :-----, திகதி :-----.
5. விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது :
 வருடங்கள் :-----. மாதங்கள் :-----, நாட்கள் :-----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
7. பால் (ஆண்/பெண்) :----.
8. விவாகமானவரா? அல்லது விவாகமாகாதவரா? :----.
9. தேசிய இனம் :----.
10. நீர் இலங்கை பிரசையா? அவ்வாறாயின், பரம்பரை மூலமாகவா? அல்லது பதிவின் மூலமாகவா? : ----.
11. கல்வித்தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :-----.
12. நீர் தற்போதும் இப்பிரதேச சபையில் சேவையாற்றுகின்றீராயின்,
 (i) தற்போது வகிக்கும் பதவி :----.
 (ii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
 (iii) அப்பதவியின் தன்மை : (நிரந்தர/அமய/தற்காலிகமாக/பதிலீட்டு/ஒப்பந்த/செயற்றிட்ட அடிப்படையில்) :-----.

13. அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள் :----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது அல்லது பிழையானது எனத் தெரியவரின் நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

8-140

---

## பண்டாரகமை பிரதேச சபை

மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையில் பதவிகள் வெற்றிடம்

மேல் மாகாணம், பண்டாரகமை பிரதேச சபையில் கீழே காட்டப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும்பொருட்டு கீழே காட்டப்பட்டுள்ள தகைமைகளைக்கொண்டுள்ள, விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தினை தயாரித்து 2014.08.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், பண்டாரகமை பிரதேச சபை, பண்டாரகமை" எனும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். பண்டாரகமை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிப்பவர்கள் மற்றும் அப்பிரதேச சபையில் தற்போது அமய/பதிலீடு/ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

| தொடர் இல. | பதவிப் பெயர் | சம்பள அளவுத்திட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | கல்வி ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | சாரதிகள் II ஆ | பீஎல் 2- 2006ஏ ரூபா 12,470-10X130-10X145-10X160-12X170- ரூபா 18,860 (ஆரம்ப நிலை) | 2 | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங் களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே அமர்வில் ஆகக்குறைந்தது 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>பிரத்தியேக வாகனம் மற்றும் நிகர நிறை 24 அந்தருக்கு குறைந்த பார மோட்டார் வாகனங்கள் செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட நிபுணத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>சாரதியாக ஆகக்குறைந்தது 3 வருட அனுபவமிருத்தல் வேண்டும். (சான்றிதழ்மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்) குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும். இரவு மற்றும் பகல் வேளைகளில் சேவையாற்றக்கூடிய நல்ல உடல் தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டியதுடன் நல்ல கண்பார்வை உடையவராக இருத்தலும் வேண்டும். பெருவீதிகள் சம்பந்தமான சட்டகோவைப் பற்றி நல்ல அறிவு இருத்தல் வேண்டும். |
| 2 | வேலை/கள ஊழியர் தரம் III | பீஎல் 1- 2006ஏ ரூபா 11,730-10X120-10X130-10X145-12X160- ரூபா 17,600 (ஆரம்ப நிலை) | 6 | ஆகக்குறைந்தது 8 ஆந் தரம்/ஆண்டு 9 இல் சித்தி அடைந் திருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | சம்பள அளவுத்திட்டம் | பதவிகளின் எண்ணிக்கை | கல்வி ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 3 | இயந்திர இயக்குநர் தரம் III | பீஎல் 1- 2006ஏ ரூபா 12,210-10X130 10X145-10X160-12X170- ரூபா 18,600 (ஆரம்ப படி நிலை) | 1 | தே. பொ. க. த. சான்றிதழ் பரீட்சையில் அல்லது க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஏதேனும் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் தொழிலுக்குரித்தான இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.<br><br>**உள்ளக விண்ணப்பதாரிகளுக்காக :**<br><br>ஆகக்குறைந்தது தரம் 8/ஆண்டு 9 இல் சித்தி பெற்றிருத்தல் மற்றும் தொழிலுக்குரித்தான இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும். |
| 04 | சுகாதாரத் தொழிலாளி தரம் III | பீஎல் 1- 2006ஏ ரூபா 11,730-10X120 -10X130-10X145-12X160- ரூபா 17,600 (ஆரம்ப நிலை) | 1 | கல்வி தகைமைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. |

மேலே தரப்பட்ட அவ்வவ் பகுதிகளுக்குரிய தகைமைகளுக்கு மேலதிமாக கீழே தரப்பட்டுள்ள பொது தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:-

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு முன்னர் 3 வருட காலப்பகுதியில் மேல் மாகாண நிரந்தர வதிவாளர் என நிரூபித்தல் வேண்டும். (பண்டாரகமை பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் நிரந்தர வதிவாளர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும் வாக்காளர் பட்டியல் மூலம் அல்லது பிரதேச செயலாளர் சான்றுபடுத்திய கிராம அலுவலரின் சான்றிதழின் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2014.08.15 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.(ஏலவே அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ளோரிற்கு மேற்குறிப்பிடப்பட்ட வயதெல்லை ஏற்படைத்தாகாது.)

(iii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) குற்றவியல் சட்ட கோவையின்கீழ் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவராக இருத்தல்கூடாது.

(v) விண்ணப்பதாரிகள் பரம்பரையாவோ பதிவின்மூலமோ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(vi) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு முன்னர் 5 வருட காலப்பகுதிக்குள் குற்றத்திற்காக (எச்சரிக்கை தவிர்ந்த) தண்டனை பெறாதவராகவும் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

(vii) அரச/மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர்கள் விண்ணப்பிக்கும்போது, அரச சேவையிலிருந்து அல்லது மாகாண அரச சேவையிலிருந்து அல்லது நியதிச்சட்டத்தின்கீழான சபைகள்/கூட்டுத்தாபனங்கள் சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

**2. சேவை நியதிகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்;

(ii) ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்கள் மூன்று வருட தகுதி காண் நிலைக்கு உட்படுவர்./ தரமுயர்த்தப்படுமாயின் ஒரு வருட பதிற் கடமையாற்றும் காலவெல்லைக்கு உட்படுவர்;

(iii) மேற்கூறப்பட்ட பதவிகளின்கீழ் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவோர் விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

(iv) இவ்வூழியர்கள் இடமாற்றத்திற்கு உட்படுவர். உள்ளூராட்சி நிறுவனங்களுக்குள் இடமாற்றும் தத்துவம் அவ்வவ் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாக தலைவருக்கே உரியதாகும். மேலும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையில் இடமாற்றம் செய்தல் அவ்வவ் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களின் சம்மதத்தின்மீது உள்ளூராட்சி ஆணையாளரினால் நடைபெறும். கடமை நேரங்கள் மற்றும் கடமையில் ஈடுபடுதல் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவன தலைவருக்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களுக்கமைய தீர்மானம் எடுக்க முடியும்.

(v) இவ்வாட்சேர்ப்பு இலங்கைச் சனநாய சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கும் தாபன விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்கு விதிகளுக்கும் அரச அல்லது மாகாண சபை அல்லது திணைக்கள கட்டளைகளுக்கும் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் அனுகூலமாக செயற்படுவதற்கும் நியமனம் பெற்றோர் கட்டுப்பட்டவராவார்.

*3.* ***ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதம்*:**

(i) *ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதிகளுக்கமைய எழுத்துமூல/கட்டமைக்கப்பட்ட பரீட்சை பெபேறுகளின்மீது அல்லது செயன்முறை பரீட்சையின் திறமைகள்மீது தகைமைகள் பெறுவோர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படுவர்.*

(ii) *ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் விதிகளுக்கமைய எழுத்துமூல/கட்டமைக்கப்பட்ட பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சை அல்லாது பதவிகளுக்காக நேர்முகப்பரீட்சையின் மூலம் புள்ளிகள் மற்றும் தகைமைகள்மீது தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*4.* ***விண்ணப்பிக்கும் விதம்*:**

(i) *விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்:-*

*(1) பிறப்புச் சான்றிதழ்;*

*(2) தேசிய அடையாள அட்டை;*

*(3) ஆரம்ப கல்வித் தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்கள்;*

*(4) தொழில்சார் அல்லது அனுபவங்களை நிரூபிக்கும் ஆவணங்கள்;*

*(5) தங்கள் வதிவை நிரூபிக்கும் பொருட்டு அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;*

(ii) *ஆரம்ப தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் ;*

(iii) *விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றஞ்செய்தல் அல்லது ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நியமித்திருந்த பதவி எண்ணிக்கைகளை திருத்துதல்/தீர்மானித்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் பண்டாரகமை பிரதேச செயலாளருக்கே உரித்தானதாகும்;*

(iv) *சாரதிப் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறையில் தகைமைகளை பெற்ற விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டு அவர்கள் செயன்முறை பரீட்சையில் தோற்றி அதில் சித்தியடைதல் அல்லது பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 24/95 இன் மூலம் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தலிற்கமைய கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையினால் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். திணைக்களத்தின் பிரதிநிதியொருவர், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வண்டி பரீட்சிப்பவர் பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அலுவலரொருவர் அடங்கிய சபையினால் நடாத்தப்படும் சாரதி பயிற்சி நிபுணத்துவத்தை மதிப்பிடும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;*

(v) *விண்ணப்பப்படிவம் இட்டு அனுப்பும் கடித உறையின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை வர்த்தமானி அறிவித்தலில் குறித்துள்ளதுபோல் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற மற்றும் 04 ஆம் பந்தியின் I இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

(vi) *தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை நிறுவன தலைவரின் சிபார்சுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். நியமித்த திகதியான 2014.08.15 இற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.*

*என். டி. ஐ. சுவர்ணா கே. பெரேரா,*
*செயலாளர்,*
*பண்டாரகமை பிரதேச சபை.*

*பண்டாரகமை பிரதேச சபை,*
*பாணந்துறை வீதி,*
*பண்டாரகமை,*
*2014, யூலை 16.*

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பண்டாரகமை பிரதேச சபை**

.................................................................................................. பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:----.
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
3. நிரந்தர விலாசம் :----.
4. தேசிய அடையாள அட்டை இல. :----.
5. பிறந்த திகதி : ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. விண்ணப்ப முடிவுத் திகதியான 15.08.2014 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
7. பால் (ஆண்/பெண்) :----.
8. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :----.
9. தேசிய இனம் :----.
10. பண்டாரகமை பிரதேச சபையில் தற்போது சேவையாற்றுகின்றீராயின்-
    வகிக்கும் பதவி :----, சேவைக் காலம் :----, அப்பதவி நிரந்தர/தற்காலிக/அமய/ ஒப்பந்தம் ஆகியன :----.
11. நீர் இலங்கை பிரசையா? அவ்வாறாயின், பரம்பரைமூலமாகவா? பதிவின்மூலமாகவா? :----.
12. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :----.
13. தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் நிபந்தனைகளுக்கமைய என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் பதவி வகிப்பாராயின்,**
**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ........................................................................................................... தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் (நிரந்தர/அமய/பதிலீடு/ஒப்பந்த) அடிப்படையில் .................. திகதி முதல் ................................... திகதி வரை .......................................... ஆக சேவையாற்றுகிறார். அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு நியமிக்கப்படுவராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்திரை இடவும்)
திகதி :----.

8-199

## மஹர பிரதேச சபை

மேல் மாகாண மாகாண அரசாங்க சேவையில் மஹர பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக மேல் மாகாணத்தில் வதியும் தகுதிபெற்ற ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| தொடர் இலக்கம் | பதவி | வெற்றிட எண்ணிக்கை | சம்பளஅளவு (மாதாந்தம்) | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | வேலை/வெளிக்கள ஊழியர் | 1 | ரூபா 11,730-10×120-10×130-10×145 - 12×160-ரூபா 17,600 (PL1-2006 A) | தரம் 5 அல்லது ஆண்டு 6 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 2 | சாரதி | 2 | ரூபா 12,470-10×130-10×145 - 10×160 - 12×170-ரூபா 18,860 (PL3-2006 A) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (ஒரு அமர்வில் ஆகக் குறைந்தது 5 பாடங்களில் சிததியடைந்திருத்தல் வேண்டும். மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட நிபுணத்துவம் பற்றிய சான்றிதழ் மற்றும் வாகனச் சாரதியாக 3 வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) ஆகக் குறைந்த உயரம் 5 அடியாக இருத்தல் வேண்டும். பகல் நேரத்திலும் இரவு நேரத்திலும் சேவை செய்வதற்கான சரீர ரீதியான தகுதியான நிலைமையில் இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த கண்பார்வை இருத்தல் வேண்டும். நெடுஞ் சாலைகள் சட்ட விதிக் கோவை பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |

**2. ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு அண்மித்த 3 ஆண்டு காலப் பகுதியில் மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஊழியர் சம்பந்தமாக உச்ச வயெல்லை ஏற்டையதாகாது.)
(iv) விண்ணப்பதாரர் சிறந்த தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் ;
(v) தண்டனைச் சட்ட விதிக்கோவையின் கீழ் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டவராக அல்லது அரசாங்க, மாகாண சபை சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக இல்லாதிருத்தல் வேண்டும் ;
(vi) விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்த ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தவோ அல்லது மாற்றங்கள் செய்யவோ அல்லது இந்த அறிவித்தலை இரத்துச் செய்யவோ திருத்தம் செய்யவோ மஹர பிரதேச சபையின் செயலாளருக்கு உரிமை உண்டு.

**சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும். ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;
(ii) மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் ;
(iii) விதவை/தபுதாரர் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;
(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டளைகளுக்கும், மேல் மாகாண சபை அல்லது மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது மஹர பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் பிறப்பிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கும் அமைந்தொழுக வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :**

(1) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் ஆட்சோப்புச் செய்யப்படும்.
(2) விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும் :-
  (1) பிறப்புச் சான்றிதழ் ;
  (2) கல்விச் சான்றிதழ் ;
  (3) வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;

(4) அண்மையில் பெற்றுக்கொண்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப் பத்திரம் ;
(6) ஏனைய தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள் ;
(7) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்.

**விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் :-**

இந்த அறிவித்தலில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் 12" × 8" அளவிலான தாளில் விண்ணப்பத்தை தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதி 2014.08.22 ஆந் திகதிக்கு முன்னர் "நிறுவனச் செயலாளர், மஹர பிரதேச சபை, பஹலகரகஹமுன, கடவத்தை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (ஏற்கனவே மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பப்படிவங்களை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.) உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். ஏ. கே. என். இந்திரஜித்,
செயலாளர்,
மஹர பிரதேச சபை.

மஹர பிரதேச சபை அலுவலகம்,
பஹலகரகஹமுன,
கடவத்தை,
2014, யூலை 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மஹர பிரதேச சபை**

மேல் மாகாண அரசாங்க சேவையில்.................................... பதவிக்காக ஆட்சேர்ப்பு

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.
   முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :-----.
2. நிரந்தர வதிவு மாவட்டம்:-----.
3. நிரந்தர முகவரி:-----.
4. பால் (ஆண்/பெண்) :-----.
5. பிறந்த திகதி :----.
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
   2014.08.22 ஆந் திகதிக்கு வயது :- வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----.
7. இலங்கைப் பிரசையானது பிறப்பினாலா அல்லது பதிவு மூலமா? :-----.
8. கல்வித் தகைமைகள் :

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ii) ஏனைய தகைமைகள் :-----.

9. தொழிற் தகைமைகள் :-----.
10. சேவை அனுபவம் :-
    (i) தற்போது வகிக்கும் பதவி :-----.
    (ii) அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
    (iii) அந்தப் பதவியில் சேவைக்காலம் :-----.
    (iv) இதற்கு முன்னர் சேவை செய்த இடம் மற்றும் வகித்த பதவி :-----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் மற்றும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானதும், சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேன். இந்த நியமனம் பற்றிய நிபந்தனைகளின் பிரகாரம் என்னால் பிழையான தகவல்கள் தரப்பட்டுள்ளதாக நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால் தகுதியற்றவனாவேன் என்பதையும் பின்னர் தெரியவந்தால் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதனையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : -----.

**ஏற்கனவே சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரராகிய திரு./ திருமதி/ செல்வி ................................... தற்போது இந்த அலுவலகத்தில் .................................... ஆக சேவையாற்றுகின்றார். விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்/சமர்ப்பிக்கவில்லை.

-----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
உத்தியோக முத்திரை.

திகதி :-----.

*8-221*

---

## திருத்தம்

**அக்குரணை பிரதேச சபை**

*அக்குறணை பிரதேச சபையின் பதவி வெற்றிடங்கள் கீழ்காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு 2014.07.18 ஆந் திகதிய 1872 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைக்கு அமைய IV (ஆ) பகுதியில் அறிவித்தல் 5 (1) கீழ்காணும் வகையில் திருத்தியமைக்கப்படுகிறது.*

5. **விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முறை**.-

(i) விண்ணப்பத்திற்கமைய 2014.08.22 ஆந் திகதிக்கு முன் செயலாளர், அக்குறணை பிரதேச சபை, அலவத்துகொட என்ற விலாசத்திற்கு பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

ரீ. எஸ். ராஜபக்ஸ,
செயலாளர்,
அக்குறணை பிரதேச சபை.

அக்குறணை பிரதேச சபை அலுவலகம்,
அலவதுகொட,
2014, யூலை 21.

*8-262*

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**எல்ல பிரதேச சபை**

எல்ல பொது விளையாட்டு மைதானத்தினை டாக்டர் ரோஹன புஸ்பகுமார மைதானம் என பெயரிடுதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் எல்ல பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க 2014.04.29 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த சபை கூட்டத்தின் போது எல்ல பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட எல்ல பொது விளையாட்டு மைதானமானது ''டாக்டர் ரோஹண புஸ்பகுமார மைதானம்'' என பெயரிடப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.*

எச். எம். சுனில் காமினி,
தலைவர்,
எல்ல பிரதேச சபை.

*8-30*

---

**இரத்தினபுரி மாநகர சபை**

விடுதிகள் தொடர்பில் அனுமதிப் பத்திரக் கட்டணம் விதித்தல் - 2014

*இரத்தினபுரி மாநகர சபையினால் 2014, பெப்புருவரி 10 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட 06 (1) ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ், கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டது என்பதை பொதுமக்களிடம் இத்தால் அறிவிக்கப் படுகின்றது.*

அதன்படி ஏதேனும் ஒரு துணை விதியின் கீழ் இரத்தினபுரி மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் ஏதாவதொரு விடுதியை அல்லது தங்குமிடத்தை நடாத்திச் செல்லல் தொடர்பில் 2014 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாநகர சபையினால் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப் பத்திரத்திற்காகவும் கட்டணமொன்று அறவிடப்படும் என்று இத்தால் அறிவிக்கின்றேன்.

வீ. கே. டபிள்யூ. அபேரத்ன,
மாநகர முதல்வர்,
இரத்தினபுரி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
இரத்தினபுரி,
2014, பெப்புருவரி 20.

**தீர்மானம்**

மாநகர சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட துணை விதியொன்றின் கீழ் அல்லது இரத்தினபுரி மாநகர சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளின் கீழ் இரத்தினபுரி மாநகர சபையினால் 2014 ஆம் ஆண்டிற்குள் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247 (அ) ஆம் பிரிவின் மூலம் மாநகர சபைகளுக்குக் கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் விடுதியொன்றை அல்லது தங்குமிடமொன்றை நடாத்திச் செல்லல் தொடர்பில், அந்த விடுதி அல்லது தங்குமிடம் கடந்த ஆண்டில் நடத்தப்பட்டு அதன் மூலம் பெற்ற பெறுகையின் 1% வீத அனுமதிப் பத்திரக் கட்டணமாக விதித்து அறவிட்டுக் கொள்வதற்காக இரத்தினபுரி மாநகர சபை தீர்மானிக்கின்றது.

*8-125*

# துணை விதிகள்

## வெள்ளவாய பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டம்*

*(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளின்) மூன்றாம் பந்தியின் 1 ஆம் உப பந்தியின் கீழ் வெள்ளவாய பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட கடமைகளின்படி 2013.10.31 ஆந் திகதி பொதுச் சபையின் அமர்வின்போது கீழ்க்கண்ட பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*தலைவர்,*
*வெள்ளவாய பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*வெள்ளவாய,*
*2014, யூன் 11.*

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற இடை நேர் விளைவான சட்டத்தின் இரண்டாம் பந்தியின் அ பிரிவோடு வாசிக்க வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 முதல் 126 வரையான பிரிவின்படி (261 ஆம் அத்தியாயமான) கீழ் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகளின்படி) இரண்டாம் பந்தியின் 1 ஆம் உப பிரிவின் கீழ் ஊவா மாகாண சபையின் மேற்படி உள்ளூராட்சி மன்ற அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் யூன் மாதம் 28 ஆந் திகதி 1816/43 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்க வர்த்தமானியில் IV பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்படி பிரதேச சபையின் துணை விதியில் 1-23 வரையிலான பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட துணைவிதிகளின்படி இந்த தீர்மானமானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் ஏற்று நடைமுறைப்படுத்த மேற்படி உள்ளூராட்சி மன்றத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகளன்படி 3 ஆம் பிரிவில் 1 ஆம் உப பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்த வெள்ளவாய பிரதேச சபை இத்தால் தீர்மானிக்கின்றது.*

*8-126/1*

## வெள்ளவாய பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டம்*

*(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளின்) மூன்றாம் பந்தியின் 1 ஆம் உப பந்தியின் கீழ் வெள்ளவாய பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட கடமைகளின்படி 2013.08.28 ஆந் திகதி பொதுச் சபையின் அமர்வின் போது கீழ்க்கண்ட பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*தலைவர்,*
*வெள்ளவாய பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*வெள்ளவாய,*
*2014, யூன் 11.*

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற இடை நேர் விளைவான சட்டத்தின் இரண்டாம் பந்தியின் அ பிரிவோடு வாசிக்க வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 முதல் 126 வரையான பிரிவின்படி 261 ஆம் அதிகாரத்தின் கீழ் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகளின்படி) மன்ற இரண்டாம் பந்தியின் 1 ஆம் உப பிரிவின் கீழ் ஊவா மாகாண சபையின் மேற்படி உள்ளூராட்சி மன்ற அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 22 ஆந் திகதி 1794/12 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்க வர்த்தமானியில் IV பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்படி பிரதேச சபை துணை விதியில் 1-25 வரையிலான பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகளின்படி சமூக ஆரம்ப இயக்கத்தினால் இயங்கி வரும் முகாமைத்துவ கிராமிய நீர் விநியோகத்திட்ட சட்டமானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் ஏற்று நடைமுறைப்படுத்த மேற்படி உள்ளூராட்சி மன்றத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகளின்படி 3 ஆம் பிரிவில் 1 ஆம் உப பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்த வெள்ளவாய பிரதேச சபை இத்தால் தீர்மானிக்கின்றது.*

*8-126/2*

# நானாவித அறிவித்தல்கள்

## காத்தான்குடி நகர சபை

*அனுமதிப்பத்திரக் கட்டணங்களும் தீர்வைகளும் விதித்தல் - 2014*

*2013.12.06 ஆந் திகதிய 2013/126 ஆம் இலக்க தீர்மானத்தின்படி 2014.01.01 ஆந் திகதி முதல் கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 162 ஆவது பிரிவின் படி நகரசபைக்கு, தீர்வைகளும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களும் விதிப்பதற்காக அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் அக்கட்டளைச் சட்டத்தின் 164 (1) பிரிவின் மூலம் சபையால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணமும் 165 (அ) பிரிவின் படி நகர சபை எல்லைக்குள் நடாத்தப்படும் கைத்தொழில்களுக்கு கைத்தொழில் தீர்வையொன்று 165 (ஆ) (1) பிரிவின் பிரகாரம் நகரசபை எல்லைக்குள் நடாத்தப்படும் வியாபாரங்களின்*

பொருட்டு வியாபார தீர்வையொன்றும் 2014 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்டு அறவிடுவதற்கு இந்நகரசபை தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2014.01.31 ஆந் திகதிக்கு முன்னர் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய கைத்தொழில்களும் வியாபாரங்களும் கட்டணங்களைச் செலுத்தி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் படியும் ஏனைய கைத்தொழில்களும் வியாபாரங்களும் 2014.01.31 ஆந் திகதிக்கு முன்னர் குறித்த தீர்வை செலுத்தப்பட வேண்டும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன். உரிய கால எல்லைக்குள் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவும் தீர்வை செலுத்த தவறினால் அதற்கெதிராக இல. 10609 உம் 1953 ஆம் ஆண்டின் நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உள்ளூராட்சி அலுவலகத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நகரசபைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் 165 (அ) (4) மற்றும் 165 (ஆ) (3) இன்படி உயர் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுமென அறியத்தருகிறேன். மேலும் அட்டவணை (1), (2), (3) இன் படி நகரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணங்களும் தீர்வைகளும் செலுத்தும்படி அறியத்தருகின்றேன்.

ஜே. சர்வேஸ்வரன்,
செயலாளர்,
காத்தான்குடி நகர சபை.

**அனுமதிப்பத்திரக் கட்டணம்**

